**தமிழ்நாடு தீயணைப்பு - மீட்புப்பணிகள் துறை , மேற்கு மண்டலம்**
**இணை இயக்குநர் செயல்முறை ஆணைகள்**
*********

**பிறப்பிப்பவர் : திரு.பி.சரவணகுமார்.,முதுகலை(வேளாண்மை),**
**எ.டி.எப்.இ(என்.எப்.எஸ்.சி),**
**இணை இயக்குநர்,**
**மேற்கு மண்டலம், கோயம்புத்தூர் - 18.**
*********

ப. உ. எண். : 65 / 2024
ந. க. எண் : 3704/ஆ1/2023 நாள் :27.02.2024

பொருள் : தீயணைப்பு - மீட்புப் பணிகள் துறை – மேற்கு மண்டலம் – இணை இயக்குநர் அலுவலககம் - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டு மேற்கு மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்ட திரு.செ.கார்த்திக் என்பவரது பணியினை வரன்முறை செய்து ஆணைகள் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :
1) தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடித எண் 1943/PSD-D2/2023 நாள் 28.08.2023
2) 11.10.2023 நாளிட்ட தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப் பணிகள் துறை, இயக்கக குறிப்பாணை ந.க.எண். 15782/ஆ1/2022
3) 18.10.2023 நாளிட்ட இணை இயக்குநர் செயல்முறை ஆணை ந.க.எண். 3704/ஆ1/2023
4) 19.10.2023 நாளிட்ட இளநிலை உதவியாளர் திரு.செ.கார்த்திக் என்பவர் பணிக்கு அறிக்கை செய்தமைக்கான விண்ணப்பம்.
5) உதவி இயக்குநர் அரசு தேர்வுகள், சென்னை கடிதம் ந.க.எண் 002502/அ6/2023, நாள் 13.12.2023
6) மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலைக்கல்வி), சிவகாசி என்பவரது கடிதம் ந.க.எண்.6049/ஆ4/2023, நாள் 19.02.2024.

**********

தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப்பணிகள் துறை, 2022 ஆண்டு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்டு கோவை மேற்கு மண்டல இணை இயக்குநர் அலுவலகத்திற்கு பார்வை 2ல் காணும் ஆணையின்படி ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 3ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி, இணை இயக்குநர் அலுவலகத்திற்கு இளநிலை உதவியாளர் பதவி காலியிடத்தில் திரு.செ.கார்த்திக் என்பவர் நியமனம் செய்யப்பட்டு பார்வை 4ல் காணுமாறு 19.10.2023 அன்று முற்பகல் பணிக்கு அறிக்கை செய்து பணிபுரிந்து வருகிறார். மேற்படி பணியாளரது கல்வித்தகுதிச் சான்றிதழ்கள் மற்றும் தமிழ் வழியில் பயின்றமைக்கான கல்வித்தகுதிச் சான்றிதழ்களின் மீது உண்மைத்தன்மைச் சான்றுகள் பார்வை 5 மற்றும் 6-ல் கண்டுள்ளவாறு பெறப்பட்டுள்ளது.

அதன்படி ஆவணங்களை சரிபார்த்து இவரது இளநிலை உதவியாளர் பணியினை கீழ்கண்டவாறு வரன்முறை செய்து ஆணைகள் வழங்கப்படுகிறது.

**ஆணைகள்:**

இணை இயக்குநர் அலுவலக இளநிலை உதவியாளர் பதவி காலியிடத்தில் 19.10.2023 அன்று முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்ட திரு.செ.கார்த்திக் என்பவரது பணி தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணி விதிகளில் பொது விதி 23(1)-ல் வழங்கப்பட்ட அறிவுரையின்படி மேற்படி பணியாளர் பணியில் சேர்ந்த நாளான 19.10.2023 முற்பகல் முதல் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணைகள் வழங்கப்படுகிறது.

"The Regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination – IV for the year 2022-2023".

மேற்படி பணியாளரது பணிவரன்முறை விபரம் பணிப்பதிவேட்டில் பதியப்பட வேண்டும்.

இணை இயக்குநர்,
தீயணைப்பு - மீட்புப்பணிகள் துறை,
மேற்கு மண்டலம் ,கோவை -18

பெறுநர்

திரு.செ.கார்த்திக்,
இளநிலை உதவியாளர்,
இணை இயக்குநர் அலுவலகம்,
மேற்கு மண்டலம்.

நகல் அ1 இருக்கை
ப.உ..கோப்பு : 1

அபி/20/02/2024